**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் – றொம்மன்**
**ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER - ROMMEN**
**ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER - ROMMEN**

**03.04.2025**

***மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கு அன்பான வணக்கம்!***

***ஆசிரியர்களின் புனிதமான பணி போற்றுதலுற்குரியது. பல ஆசிரியகள் இக்கற்பித்தல் பணியைத் தொடர்ந்தும் மிகுந்த பொறுப்புணர்வோடும் உரிமையோடும் ஆற்றுகின்றார்கள் என்பதனை எண்ணி வளாகத்தில் அனைவரும் பெருமிதம் கொள்கின்றார்கள்.***

***கடந்த சில வாரங்களாகப் பாடசாலையில் கல்வியியல் செயற்பாட்டில் ஆசிரியர்களான தங்களின் செயற்பாடு நிர்வாகத்திற்கு மட்டுமல்லாது பல பெற்றோர்களுக்கும், அங்கு கூடியிருந்தவர்களுக்கும், சக ஆசிரியர்களுக்கும் மிகுந்த சங்கடத்தையும், விரும்பத்தகாத சூழ்நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.***

***மேற்படி விரும்பத்தகாத சூழ்நிலைக்கு மூலகாரணம், தாங்கள் கடிதத்தில் குறிப்பிட்டது போன்று, கற்பித்தல் செயற்பாடுகளில் இருந்து, தாங்கள் விலகியிருப்பதை, நிர்வாகத்திற்கு அறியத்தரவில்லை என்பதே. இதை தாங்கள் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு, உணர்ந்து அதனை நிர்வாகத்திற்கு எழுத்து வடிவில் அறியத் தந்தமைக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.***

***தங்கள் கடிதத்தின் உள்ளடக்கத்தை எமது நிர்வாகம் தீவிரமாக ஆராய்ந்து கீழ்க்காணும் கருத்துக்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறது.***

*நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்கள் தொடர்பாகத் தங்களுக்கு விளக்கமளிக்க வளாகத்தில் கடந்த* **06.03.2025** *வியாழக்கிழமை அன்று ஆசிரியர்களுக்கான தகவற் கூட்டத்தில் ஆதாரங்களுடன் பல விடயங்கள் போட்டுக் காட்டப்பட்டு தெளிவான விளக்கங்கள் தரப்பட்டன.*

*அனைத்து மாணவர்களும் கற்றலைத் தொடரலாம் என்பதும் வலியுறுத்தப்பட்டது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.*

*நிறுவன நடைமுறைக்கு மாறாக தமது பிள்ளைகளின் அங்கத்துவத்தைத் தவறாகப் பயன்படுத்தினார்கள். ஆதலால் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை நிறுவனத்திற்கு ஏற்பட்டது. அதேவேளை நடவடிக்கை எடுக்கப்பட்ட பெற்றோரின் பிள்ளைகளும் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளில் தடையின்றிக் கலந்து கொள்ளலாம் என எழுத்து மூலமாக நிறுவனத்தினால் வழங்கிய தகவலையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.*

*பாடசாலை நேரத்தின் போது உள்ளே வரும் அனைத்து மாணவர்களின் பாதுகாப்பிற்கும் வளாகமே பொறுப்பு என்பது தெளிவாக ஆசிரியர்கள் அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயம் என்பதையும் சுட்டி நிற்கிறோம்.*

*குறித்த மாணவர்கள் கற்றலைத் தொடரலாம் என்பதனை அழுத்தம் திருத்தமாக அன்னை தலைமை நிர்வாகம் எழுத்துமூலமாகத் தெரிவித்த பின்பும், அவர்களின் அங்கத்துவத்தை மீள் உறுதிப்படுத்தினால் மட்டுமே, தாங்கள் கற்பித்தல் பணியை ஆற்ற வருவீர்கள் என்று வலியுறுத்தி, கற்பித்தலில் இருந்து விலகியிருந்து, தற்போது அதனை எழுத்துமூலமாக அறியப்பட்டுத்தி உள்ளீர்கள். இது தங்களது ஆசிரியர் பணிக்கு மாறான செயலாக உள்ளது என்பதனைக் குறிப்பிட விரும்புகின்றோம்.*

அன்னை பூபதி தமிழ் கலைக்கூடம் ஒரு தன்னார்வ நிறுவனம். இங்கு பணி புரியும் ஆசிரியர்கள் உட்பட ஏனைய நிறுவனம் சார்ந்து பணி செய்யும் அனைவரும் சுயவிருப்பின் அடிப்படையில், தாமாக மனமுவந்து செய்யும் மிகவும் உன்னத பணியாகும். இது வரையில் கற்பித்தல் பணிக்கு வரும்போது ஆசிரியர்கள் தமது பணியை சுயவிருப்பின் அடிப்படையில் நிறைவாகச் செய்து வந்துள்ளதை நாம் நன்றியுடன் பாராட்டிநிற்கிறோம்.

ஆனாலும் தற்போது ஒரு சில மாணவர்களுக்காக, அவர்கள் கற்றலில் இணையலாம் என்ற பின்பும், கோரிக்கை ஒன்றுடன், அதாவது குறித்த மாணவர்களின் அங்கத்துவத்தை மீள் உறுதிப்படுத்தும் வரை, கற்பித்தல் பணியில் இருந்து தாங்கள் விலகியிருப்பதைத் தவிர வேறுவழியில்லை என எழுதியுள்ளீர்கள். இது தங்களது ஆசிரியர் பணிக்குப் பொருத்தமற்ற கோரிக்கையாகும்.

குறித்த மாணவர்களின் பெற்றோரால்/பாதுகாவலரால் எமது நிறுவனத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அனைத்துவிதமான யாப்பு விதிமுறை மற்றும் சட்ட மீறள்களைக் கருத்திற்கொண்டே அவர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது நிறுவனத்தின் நடைமுறையையும், முடிவையும் தாங்கள் ஏற்றுக்கொண்டு, தங்கள் கற்பித்தல் பணியைத் தொடருவீர்கள் என நம்புகின்றோம்.

வளாக கல்வி நேரத்தில் மாணவர்களின் கல்விக்கான அமைதியான சூழலைப் பேணுதல் அனைவரது கடமையாகும். தாங்கள் தொடர்ந்தும் கற்பித்தலில் இருந்து விலகி நிற்பதாக இருந்தால், அது தங்களின் சுயமுடிவாகவே அமையும் என குறிப்பிட விரும்புகின்றோம்.

எமது நிறுவனத்தின் அமைதியை நிலைநிறுத்த அனைத்து முயற்சிகளையும் எமது நிர்வாகங்கள் இணைந்து ஆவன செய்யும். அமைதிக்கு பங்கம் ஏற்படும் எந்தவொரு நடவடிக்கையையும் எமது நிறுவனம் பாரதூரமாகக் கருதும் என்பதையும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறோம்.

குறிப்பாக, வாழிடத்தில் உள்ள எமது எதிர்காலக் குழந்தைகள் அமைதியான சூழலில் கல்வியைத் தொடரவேண்டும் என்பதே எமது நிறுவனத்தின் மிகுந்த எதிர்பார்ப்பாகும். எனவே வளாகத்தில் கற்பித்தலுக்கான அமைதியைப் பேணுவதற்குத் தாங்களும் தகுந்த ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என உறுதியாக நம்புகின்றோம்.

காலம் எமக்கு இட்டுள்ள மொழிப்பணியை மேம்படுத்த ஆசிரியப் பெருந்தகைகளின் சுயவிருப்புடனான அர்ப்பணிப்பை எமது நிறுவனம் என்றும் உளவிருப்புடன் ஏற்று நிற்கும் என்பதனையும் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

நிறுவனம் செயற்படுத்தும் திட்டங்களில் ஐயப்பாடுகள் ஆசிரியர்களுக்கு இருப்பின், அவற்றினை ஆசிரியர்கள் தங்களுக்குரிய தளங்களில், ஆசிரியர்கூட்டங்களில் எடுத்துக்கூறி தெளிவடைவதோடு, வளாகத்தின் வளர்ச்சிக்கு, தங்களது ஆலோசனைகளையும் ஒத்துழைப்பினையும் எப்போதும் போல் வழங்கலாம் என்பதனையும் மீண்டும் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றோம்.

மேலும், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட நிறுவனத்தினால் வெளியிடப்படும் தகவல்களுக்கு மட்டுமே நாம் பொறுப்பாளர்களாக இருக்க முடியும். ஏனைய தளங்களில் வரும் தகவல்களுக்கு நாம் பொறுப்பேற்க முடியாது என்பதனைப் பதிவிட விரும்புகின்றோம். எனினும், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் பணியாற்றும் ஆசிரியர்களையோ அல்லது பணியாளர்களையோ,

**தனிப்பட்டதாகவோ அல்லது குழுவாகவோ யாரேதும் விமர்சித்திருந்தால், நாம் எமது வலுவான கண்டனத்தைத் தெரிவித்துநிற்கின்றோம்.**

**மாணவர்கள் வளாகத்தில் தமிழ் மொழி, கலைப் பாடங்கள் கற்றலை மேம்படுத்தவும் அவர்களுக்கான தொடர்கற்றலை உறுதிப்படுத்தவும், நிர்வாகம் தனது பணியை எப்பொழுதும் பொறுப்புடன் ஆற்றும்.**

**தங்களது பதிலை 04.04.2025 நேரம் 12:00 இற்கு முன்**
**மின்னஞ்சலினூடாக வளாகப் பொறுப்பாளருக்கு அனுப்பிவைக்கவும்.**

**புரிந்துணர்வோடும் ஒற்றுமையோடும் வளாகத்தின் நன்மை கருதிச் செயற்படுவோம்.**

**இவ்வண்ணம்**
**நிருவாகம் - றொம்மன் வளாகம்**
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.**